**இந்திய வரலாற்று ஆராய்ச்சியை தமிழக அரசு முன்னெடுக்கும்: வடஅமெரிக்க தமிழ் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் உறுதி**

**சென்னை:** வட அமெரிக்க தமிழ்ச் சங்க பேரவை நடத்திய தமிழ் மாநாட்டில் காணொலி வாயிலாக பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், "இந்திய வரலாற்றை முழுமையாக அறிவதில் சில இடைவெளிகள் உள்ளன. அதை நிரப்பும் ஆராய்ச்சிகளை தமிழக அரசு முன்னெடுக்கும்" என்று உறுதிபட தெரிவித்தார்.

வட அமெரிக்க தமிழ்ச் சங்க பேரவையும், சாக்ரமென்டோ தமிழ்மன்றமும் இணைந்து நேற்று நடத்திய தமிழ் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின், காணொலி வாயிலாக பங்கேற்றார். அவர் பேசியதாவது:

மொழியின் பெயரை தனது பெயராக வைத்துக் கொள்வதில் முன்னோடி இனம் நாம்தான். தமிழ்ச்செல்வன், தமிழரசன், தமிழ்ச்செல்வி என்ற பெயர் கொண்டவர்கள் 18 வயதுக்கு மேல், சுமார் 3.75 லட்சம் பேர் உள்ளதாக ஐஏஎஸ் அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் கணக்கிட்டு சொல்லியுள்ளார்.

மொழி என்பது நம்மை பொருத்தவரை எழுத்தாக இல்லை, ரத்தமாக இருக்கிறது. உலகம் தோன்றியதை கணிக்க முடியாததுபோல, தமிழின் தோற்றம், தமிழ் இனத்தின் தோற்றத்தையும் கணிக்க முடியாத அளவுக்கு தொன்மையான வரலாறு நமக்கு உண்டு. அதனால்தான், 'இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலத்தில் இருந்து எழுதப்பட வேண்டும்' என்று செயல்பட்டு வருகிறோம்.



தமிழகத்தில் பொது ஊழிக்கு முன் 6-ம் நூற்றாண்டிலேயே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது. படிப்பறிவு, எழுத்தறிவு பெற்ற மேம்பட்ட சமூகமாக நாம் விளங்கினோம் என்பதை கீழடி அகழாய்வு நிலைநிறுத்தி உள்ளது.

கீழடிக்கு அருகே அகரம் அகழாய்வு தளத்தில் சேகரிக்கப்பட்ட மண்மாதிரிகளை ஆய்வு செய்தபோது, அங்கு நெல் மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. சிவகளையில் முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமிநீங்கிய நெல்மணிகளின் காலம் பொது ஊழிக்கு முன் 1155 எனகண்டறியப்பட்டுள்ளது. ‘தண்பொருநை’ எனப்படும் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கீழடி உட்பட 7 இடங்களில் விரிவான ஆய்வுகள் நடந்து வருகின்றன. சிவகளையில் மண்மாதிரிகளை ஆய்வு செய்தபோது, அங்கு நீர் செல்லும் செங்கல் வடிகாலில் நன்னீர் சென்றுள்ளதும், தேக்கி வைக்கப்பட்ட நீர்நிலையில் இருந்துஇந்த நீர் கொண்டு செல்லப்பட்டதும் தெரிந்தது.

மயிலாடும்பாறையில் கிடைத்தபொருள் பொது ஊழிக்கு முன் 1615 - 2172 ஆண்டுகளுக்கு இடைப்பட்டது என கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி, தமிழகத்தில் இரும்பின்பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது என கணக்கிடப்பட்டுள்ளது. இந்திய அளவில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, காலத்தால் முந்தியது மயிலாடும்பாறைதான். இப்படி ஒவ்வொரு ஆய்வாக வர வர, தமிழரின் தொன்மை வெளிச்சம் பெற்று வருகிறது.

‘சிந்து பண்பாடு 5,000 ஆண்டுகள் பழமையானது. அங்கு வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய மொழி தமிழ். அங்கு வாழ்ந்த மக்கள் சங்ககால தமிழரின் மூதாதையர்’ என்று ஐஏஎஸ் அதிகாரி பாலகிருஷ்ணன் நிறுவியுள்ளார். சிந்துவெளியில் ‘காளைகள்’தான் இருந்தன. இது திராவிடச் சின்னம். சிந்துவெளி முதல் இன்றைய அலங்காநல்லூர் வரை காளைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் தமிழரின் தொன்மையை பறைசாற்றுகின்றன.

தொல்லியல் ஆய்வுகளுக்கு தமிழக அரசு ஊக்கமளித்து வருகிறது. இந்திய வரலாற்றை முழுமையாக அறிவதில் சில இடைவெளிகள் உள்ளன. அதை நிரப்பும் ஆராய்ச்சிகளை தமிழக அரசு முன்னெடுக்கும்.

நாட்டிலேயே அதிகப்படியான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது தமிழகத்தில்தான். அதிலும் குறிப்பாக, வைகையை சுற்றித்தான். தமிழர் பண்பாட்டின் முக்கியத்துவம், தொன்மையை நிரூபிக்கவும், அதை உலக அளவில் கொண்டு செல்லவும் அரசு திட்டமிட்டுள்ளது.

## வெம்பக்கோட்டை அகழாய்வில் வேலைப்பாடுகள் நிறைந்த அகல் விளக்குகள் கண்டெடுப்பு



வெம்பக்கோட்டை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ள அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அகல் விளக்குகள்.

**சாத்தூர்:** விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண் பானை ஓடுகள், அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த அகல் விளக்குகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வெம்பக்கோட்டை அருகே வைப்பாற்றின் கரையில் விஜயகரிசல்குளம் மேட்டுக்காடு அமைந்துள்ளது. இது இரும்புக் காலம் முதல் வரலாற்று தொடக்கக் காலம் வரையிலான வாழ்விடப் பகுதி.

**2 ஆயிரம் பொருட்கள்:** இங்கு, தொல்லியல் மேடு என அழைக்கப்படும் 25 ஏக்கர் பரப்பளவில் முதல்கட்ட அகழாய்வுப் பணி 2021-ல் தொடங்கப்பட்டது. அதில், 3,500-க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இரண்டாம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த 6 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில், இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.





தற்போது, கருப்பு, சிவப்பு நிறம்கொண்ட சுடுமண்பானை ஓடுகள், சுடுமண் சட்டிகள், அழகிய வேலைப்பாடுகளுடன்கூடிய அகல் விளக்குகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் தொடர்ந்து ஏராளமான பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து தொல்லியல் துறை அலுவலர்கள் கூறும்போது, `தற்போது கிடைத்துள்ள சுடுமண் பானை ஓடுகள் மற்றும் அகல் விளக்குகள் மூலம் பண்டைய காலத்தில் வாழ்ந்த முன்னோர்களின் நாகரிகத்தையும், வாழ்க்கை முறையையும் அறிய முடிகிறது' என்று குறிப்பிட்டனர்.

**பொது சிவில் சட்டத்துக்கு பழங்குடிகள் கடும் எதிர்ப்பு**



**புதுடெல்லி:** மத்திய அரசு அமலாக்க முயற்சிக்கும் பொது சிவில் சட்டத்திற்கு வட கிழக்கு மாநிலங்களின் பழங்குடிகள் இடையே கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

கடந்த 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மிசோராமில் 94.4%, நாகாலாந்தில் 86.5%, மேகாலயாவில் 86.1% பழங்குடிகள் வசிக்கின்றனர். இவர்கள் தங்களது பழக்க வழக்கங்கள் பொது சிவில் சட்ட அமலால் முடிவுக்கு வந்துவிடும் என அஞ்சுகின்றனர்.

மேகாலயாவின் பழங்குடிகளில் ஆண் மகனை போல், அக்குடும்பத்தின் பெண்களின் கடைசி மகள் நிதி உள்ளிட்ட அனைத்தையும் நிர்வாகிக்கும் குடும்பத் தலைவியாக உள்ளார். வழக்கமாக மணமான பின் மகள் தன் மாமனார் வீட்டிற்கு செல்கிறார். ஆனால், இங்குள்ள காரோஸ் எனும் பழங்குடியில் மணமாகி மணமகன்தான் மாமனார் வீட்டில் வசிக்கச் செல்கிறார். நாகா பழங்குடியில் பெண்களுக்கு சொத்து உரிமை அளிப்பதில்லை. இது போன்ற தம் பாரம்பரியங்களை பொது சிவில் சட்டத்தால் கைவிட வேண்டி இருக்கும் என அஞ்சுகின்றனர்.

திருமணம், விவாகரத்து மற்றும் குழந்தை தத்து எடுப்பு ஆகியவை எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மேகாலயாவில் தனித்துவம் பெற்றவை. பொது சிவில் சட்டத்தால் இம்மூன்றிலும் பாதிப்பு ஏற்படும் என்கின்றனர்.

இதனால், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியின் உறுப்பினராக இருந்தும் முதல்வரான கான்ராட் கே.சங்மா, பொது சிவில் சட்டம் இந்திய இறையாண்மைக்கு முற்றிலும் எதிரானது எனக் கருத்து கூறியுள்ளார்.

இம்மாநிலப் பழங்குடி கவுன்சிலின் மூன்று முக்கிய உறுப்பினர்களும் கூடப் பொது சிவில் சட்டத்தை கடுமையாக எதிர்ப்பது என முடிவு எடுத்துள்ளனர்.

மிசோராமில் பலவகை பழங்குடிகளும் அதில் பல உட்பிரிவுகளும் உள்ளன. அதேபோல், இங்கு கிறிஸ்துவப் பழங்குடிகளிலும் பல பிரிவுகளும், உட்பிரிவுகளும் உள்ளன. இந்த அனைத்து மக்களுக்காக தனிச்சட்டம் உள்ளது. அதன்படி, மத்திய அரசு அமலாக்கும் எந்த சட்டமும் அதன் சட்டப்பேரவையில் விவாதித்து அமலாக்கப்படுவது அவசியம்.

இச்சூழலில், கடந்த பிப்ரவரி14-ல் பொது சிவில் சட்டத்திற்குஎதிராக மிசோராமின் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே பொது சிவில் சட்டத்தை அனைவரும் இணைந்து எதிர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாகாலாந்து மாநிலம் 1963-ல் உருவாக்கப்பட்ட போது, நாகாபழங்குடிகளின், நிலம், குடும்பம்உள்ளிட்ட அனைத்து பழக்கவழக்கங்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கப்பட்டது. அதன்படி, மத்திய அரசின் அனைத்து சட்டங்களையும் நாகாலாந்தின் சட்டப்பேரவையில் அங்கீகரிக்கப்பட்ட பின்பே அமல் செய்யப்படும்.

பொது சிவில் சட்டத்திற்கு முஸ்லிம்களும், சீக்கியர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இவர்களுடன் பழங்குடிகளும் பொது சிவில் சட்டத்திற்கு எதிர்ப்புதெரிவித்திருப்பது மத்திய அரசிற்குநெருக்கடியை அதிகரித்துள்ளது. ஏனெனில், முஸ்லிம்கள், சீக்கியர்களுடன் பழங்குடிகளும் போராட்டம் நடத்தும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தனி மெஜாரிட்டி கொண்டதால் அந்த மசோதாவை மத்திய அரசு, மக்களவையில் மட்டும் நிறைவேற்றும் வாய்ப்புகள் உள்ளன. மாநிலங்களவையில் மெஜாரிட்டி இல்லாததன் காரணமாக அது நிறைவேறுவதில் சிக்கல் எழும் வாய்ப்புகளும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

**இந்தியா-மியான்மர்-தாய்லாந்து: முத்தரப்பு நெடுஞ்சாலை பணிகள் 70 சதவீதம் நிறைவு - மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தகவல்**



மத்திய அமைச்சர் நிதின் கட்கரி

**புதுடெல்லி:** மத்திய சாலைப் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி நேற்று கூறியதாவது:

இந்தியா, தாய்லாந்து மற்றும் மியான்மர் இடையே 1,400 கி.மீ. நீள நெடுஞ்சாலைப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதில், 70 சதவீத பணிகள் ஏற்கெனவே நிறைவடைந்துள்ளது. இந்த முத்தரப்பு சாலையின் மூலம் தென்கிழக்கு ஆசியாவுடன் தரைவழிப் போக்குவரத்துக்கான தொடர்புகளை கணிசமாக அதிகரிக்க முடியும். குறிப்பாக, வர்த்தகம், கல்வி, சுகாதாரம், சுற்றுலா உறவுகளுக்கு இந்த முத்தரப்பு சாலை உத்வேகமளிக்கும். இவ்வாறு அமைச்சர் நிதின் கட்கரி கூறினார்.

இந்த முத்தரப்பு நெடுஞ்சாலை மியான்மர் வழியாக தாய்லாந்தில் உள்ள மே சோட்டுடன் இந்திய மாநிலம் மணிப்பூரில் உள்ள மோராவை இணைக்கும்.

மூன்று நாடுகளை இணைக்கும் சாலை பணிகள் எப்போது முடியும் என்று நிதின் கட்கரி தெரிவிக்கவில்லை. முன்னதாக, இந்த முத்தரப்பு நெடுஞ்சாலை பணிகளை 2019 டிசம்பரில் முடிக்க மத்திய அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால், பல்வேறு இடர்பாடுகள் காரணமாக இந்த பணிகள் இன்னும் முடிவடையாமல் உள்ளது.

## பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க பயணம் இந்திய பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படுத்துமா?




கரோனா பெருந்தொற்று, அதன்பிறகு உக்ரைன் – ரஷ்யா போர் ஆகிய முக்கிய காரணங்களால் பெரும்பாலான உலக நாடுகள் பொருளாதார சவால்களை சந்தித்து வருகின்றன. அமெரிக்கா, டாலர் அச்சடித்து மக்களுக்கு கரோனா நிவாரணமாக வழங்கியது. இதன் காரணமாக 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அமெரிக்காவில் பணவீக்கம் முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும் பொருளாதார இறுக்கம் நீங்கவில்லை.

இந்த சூழ்நிலையில், இந்தியா ஒரு பிரகாசமான பொருளாதார சூழ்நிலையில் உள்ளது. காரணம், நமது நாட்டில், 2022-23 நிதியாண்டுக்கான வளர்ச்சி வீதம், 7.2 சதவீதமாக பார்க்கப்படுகிறது. இதுதவிர, நமது நாட்டில், இளைய தலைமுறை எண்ணிக்கை மற்றும் திறன்மிக்க மக்கள் வளம் அதிகம் உள்ளது. மேலும், நமது உற்பத்தித் துறையில் புள்ளிவிவரங்கள் வளர்ச்சிக் கணக்கைக் கொடுக்கிறது. நாட்டின் வர்த்தக நிலவரத்தின் கண்ணாடியாக திகழும் ஜிஎஸ்டி வசூல் கடந்த மூன்று மாதங்களில் தொடர்ந்து ஏறுமுகமாக உள்ளது.

அதேநேரம் சராசரி மனிதனின் வாழ்க்கையில் பணப்புழக்கம் அதிகமாக இல்லை. சிறு தொழில் அமைப்புகளுக்கான தொழில் வாய்ப்புகள் குறைவாக உள்ளது. அதனால், ஏழை, நடுத்தர மக்களின் வேலைவாய்ப்புகள் குறைந்துள்ளன. இது ஒருபுறமிருக்க, நாட்டின் ஏற்றுமதி நிலவரம் பெருமளவு சரிந்து வருகிறது. இதனால், இறக்குமதி பொருள்கள் விலை அதிகரிக்கும். ஏற்றுமதியை நாம் அதிகரிப்பதன் மூலமே, அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரிக்கும்.

**அமெரிக்க பயணம்:** பிரதமர் மோடி சமீபத்தில் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டார். அரசியலைத் தாண்டி, இந்த பயணத்தின் மூலம் பொருளாதார பலன்கள் என்ன என்று பார்ப்போம்:

இந்த பயணத்தின் போது 12 ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அவற்றில் ஐந்து ஒப்பந்தங்கள் முக்கியமானவை.

ராணுவ போர் விமானங்களில் பயன்படுத்துவதற்காக, 'எப் 414' ரக, ஜெட் போர் விமான இன்ஜின்களை, நமது நாட்டிலேயே தயாரிப்பதற்கானது. அமெரிக்காவின் ஜெனரல் எலக்ட்ரிக் ஏரோஸ்பேஸ் நிறுவனத்துடன், நமது நாட்டின் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் இடையே இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இனி, 'தேஜஸ்' போர் விமானங்களில் கூட நமது ஜெட் இன்ஜின்களையே பயன்படுத்த முடியும். அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு பிறகு இந்தியா இனி சொந்தமாக ஜெட் இன்ஜின்களை தயாரிக்க முடியும்.

உள்நாட்டிலேயே முதன்முறையாக, செமி கண்டக்டர் உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது. அவற்றைப் பெற, சீனா உள்ளிட்ட பிற நாடுகளை சார்ந்து இருக்க வேண்டி இருந்தது. 'மைக்ரான்' நிறுவனம், குஜராத்தில் ரூ.22 ஆயிரம் கோடியில் உற்பத்தி மையம் தொடங்க உள்ளது.

ராணுவத்திற்காக ட்ரோன்களை, அமெரிக்காவிடம் இருந்து வாங்குவது தொடர்பான ஒப்பந்தமும் கையெழுத்தாகி உள்ளது. நாட்டின் பாதுகாப்புக்கு இந்த ட்ரோன்கள் முக்கியமானவை. இது இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் மற்றும் மதிப்புச் சங்கிலிகளை உருவாக்கும். 2025-ம் ஆண்டு, நிலவுக்கு மனிதர்களை அனுப்ப அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா' திட்டமிட்டுள்ளது. இது தொடர்பானஒப்பந்தத்திலும் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. 2024-ம் ஆண்டில் சர்வதேச விண்வெளி நிலைய பணிகளில் நாசாவும், இஸ்ரோவும் இணைந்து பணியாற்றும்.

ஆக, நமது நாட்டின் சுயசார்பு, பாதுகாப்பு, தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அவசியமான முக்கிய ஒப்பந்தங்களை எளிதாக சாதித்திருக்கிறார் பிரதமர் மோடி. அதற்கு, அவர் உருவாக்கி இருக்கும், நமது நாட்டின் மீதான மதிப்பும், பொருளாதார பலமும் அடிப்படை காரணம்.

அத்துடன் பிரதமர் மோடி, டெஸ்லா நிறுவன தலைமைச் செயல் அதிகாரி எலான் மஸ்க்கை சந்தித்து பேசினார். மின்சார கார்கள் தயாரிப்பில் உலகின் நம்பர் ஒன் ஆக இருக்கும் டெஸ்லா, இந்தியாவில் கால் பதித்து கார் உற்பத்தியில் முத்திரை பதித்தால், வாகன எரிபொருள் வாங்குவதற்கு செலவிடப்படும் நமது அன்னியச் செலாவணி மிச்சமாகும். சுற்றுச்சூழல் மேம்படும்.

இதுதவிர கூகுள், மைக்ரோசாப்ட், ஆப்பிள் நிறுவன தலைமைச் செயல் அதிகாரிகளும் பிரதமர் மோடியை சந்தித்துப் பேசி உள்ளனர். அப்போது இந்தியாவில் கூடுதலாக முதலீடு செய்ய போவதாக அவர்கள் உறுதி அளித்துள்ளனர். இதனால் ஏராளமான வேலை வாய்ப்பு உருவாகும். பொருளாதார வளர்ச்சியும் இன்னும் வேகம் எடுக்கும்.

அமெரிக்காவின் உயரிய ட்ரோன் தொழில்நுட்பம் நமது பாதுகாப்புத் துறைக்கு கிடைத்திருப்பதும் அப்படித்தான். சீனாவிற்கு மாற்றாக இந்தியாவை சிந்தித்து வந்த அமெரிக்கா, இப்போது ஐரோப்பிய நாடுகளுக்கு மாற்றாகவும் நம்மை மதிக்கிறது.

பிரதமரை அமெரிக்கா வரவேற்றதும், முக்கிய ஒப்பந்தங்கள் நமக்கு கிடைத்திருப்பதும், இந்திய – அமெரிக்க வரலாற்றில் இந்தியாவுடன் சேர்ந்தால் அமெரிக்காவும் வளரலாம். அமெரிக்காவுடன் இணைந்தால், இந்தியாவும் வளர முடியும் என்ற கணக்கில், பிரதமரின் அமெரிக்க பயணமும், அதனால் கிடைத்த பலன்களையும் நாம் அர்த்தம் கொள்ளலாம்.